மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றும் இல்லை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாவது, . . .

திரு. கே. விநாயகம் : ' How it is not a point of order ' என்பதற்கு எக்ஸ்ப்ளனேஷன் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பேரவை நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்காக வகுத்திருக்கும் விதிமுறைகள் மீறப்பட்டிருக்குமானால் அவற்றைச் சுட்டிக்காட்டுவதற்கும், நாம் கடைப்பிடித்து வருகின்ற மரபுகளிலிருந்து வழுவுகின்ற நேரத்தில் அவற்றைச் சுட்டிக்காட்டுவதற்கும்தான் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பப்படவேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் எழுப்பியிருப்பது, அமைச்சரவையில் நடந்திருக்கின்ற நிகழ்ச்சியைப்பற்றியது. அமைச்சரவையில் நடக்கின்ற நிகழ்ச்சிக்கும் இந்த மன்றத்திற்கும் தொடர்பு இல்லை.

THIRU K. VINAYAKAM : We can convert it into point of information.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு பிரச்சினை. அமைச்சர் பதவியிலிருந்து விலகியவர்கள் அறிக்கை கொடுக்க வேண்டும் என்று அவர்களை வற்புறுத்த முடியாது. அவர்கள் விரும்பினால் அறிக்கை கொடுக்கலாம். அதைப்போலவே முதலமைச்சர் விரும்பினால், அமைச்சர்கள் பதவியிலிருந்து விலகியதைப் பற்றியும், அமைச்சரவையை மாற்றியமைத்ததைப் பற்றியும் அறிக்கை கொடுக்கலாம். ஆனால், அவர்களை வற்புறுத்த முடியாது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் எழுப்பியிருப்பதில் எந்தவிதமான பாயின்ட் ஆஃப் ஆர்டரும் இல்லை.

2. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Port Police Station, Cuddalore.

* 1 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Port Police Station, Cuddalore was attacked about 26th April 1970; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) 25—4—1970-ம் நாள் இரவு, சுமார் 300 பேர் கடப்பாரை, தடி, கற்களுடன் வந்து கடலூர்த் துறைமுகக் காவல் நிலையத்தையும் காவல் துறை அலுவலர்களையும் தாக்கினர். சிங்காரத் தோப்பு, சோணக்குப்பம் கிராமங்களில் காவல் துறையினர் மது விலக்குத் திடீர்ச் சோதனை நடத்தியதற்காக இவர்கள் இவ்வாறு

1970 நவம்பர் 26]

தாக்குதல் நடத்தினார்கள். தாக்குதல் நடத்திய கூட்டத்தினரைக் கலைப்பதற்காக தடியடிப் பிரயோகம் செய்தது பலனளிக்காமையால் காவல் துறையினர் தக்க எச்சரிக்கைக்குப் பிறகு மூன்று சுழல்கள் சுட்டனர். இதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, காவல் நிலையத்தில் கைதிகளை வைத்திருந்து விசாரணை செய்யும் நேரத்தில், அவர்களைக் காவலர்கள் சில வேளைகளில் பலமாகத் தாக்குவதன் காரணமாகக் கைதிகளுக்கு மரணம் நேரிடும் சூழ்நிலை ஏற்படுகிறது. அப்போது பொதுமக்கள் காவல் நிலையத்தைச் சூழ்ந்துகொள்வது, காவலர்களைத் தாக்குவது போன்ற நெருக்கடி ஏற்படுகிறது. காவல் நிலையங்கள் "தண்டனை நிலையங்களாக" இல்லாமல் "சேவை நிலையங்களாக" விளங்க வேண்டும் என்ற கருத்துக்கிணங்க, காவல் நிலையத்தில் உள்ள கைதிகளுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்க தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அந்தக் காவல் நிலையத்தில் மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போன்ற எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறவில்லை ; யாரும் தாக்கப்படவில்லை. ஆகவே, அவர்கள் கேட்ட அந்தப் பொதுவான கேள்வியைப் பொறுத்த வரையில், காவல் நிலையங்களில் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்ற அசம்பாவிதங்கள் இன்றல்ல, இருபது இருபத்திரண்டு ஆண்டுக் காலமாக நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், அப்படிப்பட்ட அசம்பாவிதம் நடைபெறக்கூடாது என்பதில் இந்த அரசு கண்ணுங்கருத்துமாக இருக்கிறது. அதுபற்றி காவல் துறைப் பெரிய அதிகாரிகளுக்கெல்லாம் ஏற்கனவே தாக்கீது அனுப்பப்பட்டிருப்பதை இந்த மன்றத்தில் நான் எடுத்துக் கூறியிருக்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், மதுவிலக்கின் காரணமாக இதுபோன்று 300 பேர்கள் ஒன்றுசேர்ந்துகொண்டு தாக்கியதாகக் கூறினார்கள். ஆகவே, மதுவிலக்குத் திட்டம் எந்த அளவிற்குப் படுதோல்வி அடைந்திருக்கிறது என்பதை கனம் முதலமைச்சரவர்கள் உணருகிறார்களா ? அதனால் மதுவிலக்குத் திட்டத்தை ரத்து செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அந்த 300 பேர் கட்டப்பாரை, தடிகள் கொண்டு தாக்கியதற்கும் மதுவிலக்குப் பிரச்சினைக்கும் சம்பந்தம் இல்லை. இது, அந்தத் தாக்கியவர்களுடைய பிரச்சினை.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையிலும் போலீசைக் கண்டாலே ஓடி ஒளிகின்றவர்கள், மாமூல் முதலியவற்றைக் கொடுத்தவர்கள், தங்களிடமிருந்து பணத்தையும் வாங்கிக்கொண்டு போலீசார் தம்மைப் பிடிக்க வருகின்றார்களே என்று அவர்களை எதிர்க்கின்ற